விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 210 வள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 01 வெள்ளிக்கிழமை (17.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829








# கிளிநொச்சி ஒருங்கிணைப்பு கூட்டத்தில் களேபரம்

## எம்.பி அர்ச்சுனாவை வெளியேறுமாறு கோசம்





(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சர்ச்சையான கருத்துக்களால் ஏற்பட்ட கடும் வாக்குவாதம் மற்றும் பரபரப்பைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)

# அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் சந்திரசேகர்

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் தகாத நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் நேற்று ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பில் ஊடகங்களிடம்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியில்

# ஆறு என்புக்கூடுகள் புதிதாக அடையாளம்




(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக ஆறு மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன் கைக்குழந்தை உட்பட ஏழு மனித என்புக்கூட்டுத் தொகுதி

02ஆம் பக்கம் பார்க்க

## மூதூர் படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல்



15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில்

# பலத்த காற்று வீசும் என எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டைச் சூழவுள்ள பகுதிகளில் நிலவும் தென்மேற்கு பருவநிலை காரணமாக, வட மாகாணம்

15ஆம் பக்கம் பார்க்க

# பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கான

## வீதி நேற்று முதல் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து 2024 இல் விடுவிக்கப்பட்ட பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் நிரந்தர வீதி நேற்று (16) முதல் திறக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி அலங்காரத் திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயத்துக்கு நிரந்தர

16ஆம் பக்கம் பார்க்க

## சீன அரசால்

# பாடசாலை சீருடை அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரச பாடசாலைகள், அரச அனுசரணையின் கீழ்

15ஆம் பக்கம் பார்க்க

## பசில் மற்றும் அர்ஜூனவை

# நாட்டுக்கு அழைத்து வருவதில் தடையில்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மஹேந்திரன் உள்ளிட்ட நிதி மோசடிக் குற்றச்சாட்டுகளுக்குள்ளான நபர்களை நாட்டுக்கு அழைத்து வருவதில் அரசாங்கத்திற்கு

15ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைவு வரவேற்கத்தக்கது

## அமைச்சர் லால்காந்த



(கண்டி)


தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு வரவேற்கத்தக்கது என விவசாயம்,

16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருநகர் புனித யாகப்பரின் பெருவிழா நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்பெற்ற யாழ்ப்பாணம், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்று (16) வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் தினசரி மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து நற்கருணைப் பெருவிழா வழிபாடும் இடம்பெறவுள்ளன.

நவநாள் வழிபாடுகளை தொடர்ந்து எதிர்வரும் 25ம் திகதி சனிக்கிழமை பெருவிழா இடம்பெறவுள்ளது.

பெருவிழாத் தினத்தன்று காலை 5.00 மணிக்கு முதற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காலை 06.15 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் தலைமையில் பெருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு திருச்செபமாலையைத் தொடர்ந்து புனித யாகப்பரின் திருச்சுரூப பவனி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பாட ரீதியான ஆசிரியர் நியமன முறை அறிமுகப்படுத்தப்படும்

## அமைச்சர் சந்தன அபயரத்ன



(கொழும்பு)

நாட்டின் ஆசிரியர் பற்றாக்குறையைச் சமாளிக்க, பாடரீதியான ஆசிரியர் நியமன முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தெரிவித்தார்.

ஆனமடுவவில் உள்ள கருக்குமடுவில் புதிய வகுப்பறைக் கட்டிடத் திறப்பு விழாவில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் புதிய நியமனச் செயல்முறையானது, குறிப்பாக கணிதம் போன்ற கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பாடங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும்.

2021 ஆம் ஆண்டிலிருந்து முறையான ஆசிரியர் நியமனம் எதுவும் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், இந்த ஆண்டு இறுதிக்குள் 30 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

அமைச்சரின் கூற்றுப்படி, இந்த நியமனத்திற்கான நிதியும் ஒப்புதல்களும் ஏற்கனவே பெறப்பட்டுவிட்டன.

அதே நேரத்தில், பட்டதாரிகள் உட்பட சுமார் 180,000 விண்ணப்பதாரர்கள் மே மாதம் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் பங்கேற்றனர். விடைத்தாள்களைத் திருத்தும் பணி தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளது.

இந்தப் புதிய முறையானது, எந்தெந்தப் பாடங்களில் ஆசிரியர்கள் மிகவும் தேவைப்படுகிறார்களோ, அந்தப் பாடங்களில் பள்ளிகளுக்குத் தகுதியான ஆசிரியர்கள் கிடைப்பதை உறுதிசெய்ய உதவும் என்று பேராசிரியர் அபயரத்ன தெரிவித்தார்.

அதிபர் சேவையைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)






## ஆறு என்புக்...

கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 34 ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று யாழ்ப்பாண நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

நேற்றைய அகழ்வில் தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர், தடயவியல் பொலிசார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் பங்கேற்றனர்.

இதுவரை மொத்தமாக 420 மனித என்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் 416 மனித என்புக் கூட்டு தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய அகழ்வின் போது வெள்ளைப் பாசி மணி ஒன்று 130வது பிற சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,33)

## கிளிநொச்சி...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தின் போது; பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, திருவையாறு பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தென்னைச் செய்கைத் திட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டார்.

அத்துடன் அந்தத் திட்டத்தில் தென்னை நாற்று விநியோகம் மற்றும் நடுகை நடவடிக்கைகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாக அர்ச்சுனா குற்றஞ்சாட்டியதுடன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் இந்த விடயத்தில் உடந்தையாக செயற்படுவதாக விமர்சித்தார்.

இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் பதற்றமான சூழல் நிலவிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

அதன் பின்னர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட சில தரப்பினருக்கிடையிலும் வாய்த்தகராறு ஏற்பட்டது.

இந்தநிலையில் நிலைமை மேலும் பதற்றமடைந்ததைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

அவர்களைத் தொடர்ந்து பல்வேறு அரச திணைக்களங்களின் அதிகாரிகளும் கூட்டத்திலிருந்து வெளியேறியதால், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

இதன்போது ஏற்பட்ட குழப்பத்தால் அங்கிருந்த பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவை வெளியேற்ற வேண்டும் என கோசங்களை எழுப்பிய நிலையில் கடற்றொழில் அமைச்சர், அர்ச்சுனாவை வெளியேறுமாறு கோரினார்.

அர்ச்சுனாவுக்கு எதிராக கடும் எதிர்ப்பு நிலவிய சூழ்நிலையில் அவர் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்

# உண்மையைக் கண்டறிவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்



## ------- அரசாங்கம் உறுதி -------

(கொழும்பு)

**செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் காணாமல்போனோர் தொடர்பான உண்மைத்தன்மையை கண்டறிவதற்கு, அரச தரப்பிலிருந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது தற்போதைய அரசின் முக்கிய நோக்கம் என்று தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அனைத்து மக்களுக்கும் பொதுவான ஜனாதிபதி என்பதைச் சுட்டிக்காட்டினார்.

வரலாற்றில் முதன்முறையாக இந்த அரசுக்கு வடக்கு மக்களிடமிருந்து பலத்த ஆதரவு கிடைத்துள்ளது. காணி விடுவிப்பு உள்ளிட்ட பல வழிகளிலும் நல்லிணக்கத்தை எட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


வடக்கு மற்றும் தெற்கு என இரு தரப்பிலும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாது பெற்றோர் இன்றும் கண்ணீர் வடிக்கும் நிலை நீடிக்கின்றது. அந்த வேதனையைத் தீர்க்க அரசு முன்னுரிமை அளிக்கின்றது.

நாங்கள் ஆட்சிக்கு வரும் போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தில் போதிய ஆளணி வளம் இருக்கவில்லை. நாம் உடனடியாகப் புதிய ஆட்சேர்ப்புகளைச் செய்து 60 பேரை அதில் இணைத்துள்ளோம். இதற்கென வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தற்போது தலா மூன்று பேர் கொண்ட 15 விசாரணைப் புலனாய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், நிலுவையிலுள்ள 11 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

# ஊழல்வாதிகளை அடையாளம் காண்பது அரசியல் பழிவாங்கல் அல்ல

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



(கொழும்பு)

இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்களை நாம் அடையாளம் கண்டு தண்டிப்போம் என்று கூறய இலங்கை அரசாங்கமும் தற்போதைய தமிழக அரசும் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்தன.

இப்போது இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்களை இந்த அரசாங்கங்கள் அடையாளம் காண விளைந்தால், அவர்கள் பழிவாங்கலில் ஈடுபட்டுள்ளார்கள் என்று கூறுகிறார்கள்.

இதனைப் பழிவாங்கல் என்று கூறினால், குற்றவாளிகளைப் பொலிஸார் துரத்துவதும் பழிவாங்கலே எனத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இங்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசும் தமிழகத்தின் முதல்வர் விஜய்யின் அரசும் அரசியல் பழிவாங்கல்களில் இறங்கியிருப்பதாகவும், அதுபற்றிய நிலைப்பாட்டைக் கோரியும் எழுப்பப்பட்ட கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது:

முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும். இது இயற்கையின் வெளிப்பாடு. அன்று பதவியில் இருத்தப்பட்ட அரசியல்வாதிகள் தமது பதவிகள் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே மக்களால் தரப்பட்டன என்பதை மறந்து, அப்பதவிகளை தம்மையும் தமது சுற்றத்தாரையும் மேம்படுத்துவதற்காகவே பயன்படுத்தினர். தமக்கு சேவை செய்வார்கள் என்று நினைத்து வாக்களித்த மக்களிடம் இலஞ்சம் பெற்றே அவர்களுக்கான சேவைகளை வழங்கினர்.

அரசியல்வாதி என்பவன் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளன். அவன் மக்களின் நம்பிக்கைக்குப் பொறுப்பாகவே நடந்துகொள்ள வேண்டும்.

இதுவரை காலமும் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் ஆட்சிக்கு வந்தவர்கள் தங்கள் சுயநலத்தை முன்னிறுத்தியே ஆட்சி நடத்தினர். மக்களை முட்டாள்களாக்கி அவர்களுக்குப் பணம் கொடுத்து, அவர்களின் வாக்குகளைப் பெற்றதன் பின்னர், இலஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சாது மிரண்டால் என்ன நடக்கும் என்பதை இலங்கை மக்களும், அண்மையில் தமிழ்நாட்டு மக்களும் செயலில் காண்பித்து விட்டனர்.

இலஞ்ச ஊழலில் இதுவரையில் ஈடுபட்டவர்களை நாம் அடையாளம்கண்டு தண்டிப்போம் என்று கூறியே இரு அரசாங்கங்களும் மக்களின் ஆதரவைப் பெற்றனர்.

அன்று இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்களை இப்போது இந்த அரசாங்கங்கள் அடையாளம் காண விளைந்தால், அவர்கள் பழிவாங்கலில் ஈடுபட்டுள்ளார்கள் என்று கூறுகிறார்கள். இதனைப் பழிவாங்கல் என்றுகூற முடியாது என அவர் குறிப்பிட்டார். (நி)

# இளைஞர்களை தவறாக வழிநடத்தும் சமூக ஊடக விளம்பரங்கள்

## எச்சரிக்கை விடுக்கும் பொலிஸார்

(கொழும்பு)

தற்போதைய காலகட்டத்தில் போதைப்பொருள் பாவனை ஒட்டுமொத்த சமூகத்தையும் சீரழிக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதுடன், இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக பரப்பப்படும் தவறான விளம்பரங்களும் வழிகாட்டுதல்களுமே இளைஞர்களை போதைப் பழக்கத்திற்கு இட்டுச் செல்கின்றன என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் கொழும்பில் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நேர்காணலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர்,

முன்னர் நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களின் ஊடாகவே போதைப்பொருள் பழக்கம் பரவியிருந்த நிலையில், தற்போது சமூக ஊடகங்கள் மற்றும் இணைய தளங்களில் இடம்பெறும் தவறான பிரசாரங்களே இளைஞர்களை அதிகளவில் பாதித்து வருகின்றனர்.

இலங்கையில் 1979 ஆம் ஆண்டளவில் இயற்கை சார்ந்த போதைப்பொருட்கள் அறிமுகமானதாகவும், தற்போது இரசாயன முறையில் தயாரிக்கப்படும் செயற்கை போதைப்பொருட்களின் பயன்பாடு பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செயற்கை போதைப்பொருட்களின் விலை உயர்வால், ஒரு நாளில் இருமுறை போதைப்பொருள் பயன்படுத்தும் ஒருவருக்கு சுமார் 8,000 ரூபா வரை செலவாகின்றது.

இதன்படி மாதத்திற்கு சுமார் 240,000 ரூபா தேவைப்படுவதால், அந்தப் பணத்தைப் பெறுவதற்காக வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்தல், பெண்களின் நகைகளைத் திருடுதல், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் உதிரிப் பாகங்களைத் திருடுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் போதைப்பொருள் பாவனையாளர்கள் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், போதைப்பொருள் பாவனை குடும்ப வன்முறைகள் மற்றும் கொலைச் சம்பவங்களையும் அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், அண்மையில் எம்பிலிபிட்டிய பகுதியில் தனது தாய், தந்தையை மகனே கொலை செய்த சம்பவத்தில், குறித்த இளைஞன் செயற்கை போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பது பொலிஸ் விசாரணையில் உறுதியானதாக தெரிவித்தார்

அத்துடன், போதைப்பொருள் பயன்படுத்திய நிலையில் வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக எச்சரித்த அஜித் ரொஹன, இதனால் எப்போது வேண்டுமானாலும் பாரிய வீதி விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த சட்ட அமுலாக்க நடவடிக்கைகளுடன், பெற்றோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் வலியுறுத்தினார். (நி)

# சட்டவிரோத மலர்ச் செடிகளுடன் விமான நிலையத்தில் பெண் கைது!

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில், இலங்கை பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமாக மலர்ச் செடிகளை தனது பயணப்பையில் மறைத்து கொண்டு வர முயன்ற பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்திற்கமைய, தாவரங்கள் அல்லது அதன் பாகங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு, அனுமதி பெற்றிருக்க வேண்டும்

இந்த நிபந்தனைகளுக்கு புறம்பான எந்தவொரு இறக்குமதியும் சட்டவிரோதமான செயல் என்பதுடன், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் என சுங்க அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து, கைப்பற்றப்பட்ட மலர்ச் செடிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. குறித்த பயணிக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட மலர்ச்செடி, அழிப்பதற்காக விமான நிலைய தாவர தனிமைப்படுத்தல் அலுவலகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விளையாட்டுச் செய்திகள்

# உலக கிண்ண கால்பந்து

# இங்கிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஆர்ஜென்டினா

**உலகக்கிண்ண கால்பந்து தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டினா முன்னேறியுள்ளது.**



உலகக் கிண்ண கால்பந்து போட்டியின் 2-ஆவது அரையிறுதி ஆட்டத்தில், நடப்பு சம்பியன் ஆர்ஜென்டினா - இங்கிலாந்து அணிகள் நேற்று முன்தினம் மோதின. அமெரிக்காவின் மெர்சிடீஸ் பென்ஸ் திடலில் அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் ஏதுவும் அடிக்கவில்லை.

இதனால் ஆட்டத்தின் இரண்டாவது பாதி சூடு பிடித்தது. இரண்டு அணிகளும் கோல் அடிக்க பல முயற்சிகள் மேற்கொண்டன.

ஆட்டத்தின் 55-ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் கோர்டான் கோல் கணக்கைத் தொடங்கினார். இதனால், இங்கிலாந்து 1-0 என முன்னிலைப் பெற்றது.

பதிலுக்கு ஆட்டத்தின் 85 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவும் கோல் அடிக்க ஆட்டம் 1-1 என சமநிலை பெற்றது. தொடர்ந்து ஆட்டத்தின் 90-ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினா தனது இரண்டாவது கோலை அடித்தது. இதனால், ஆர்ஜென்டினா அணி 2-1 என முன்னிலை வகித்தது.

இதன் பிறகு இரண்டு அணிகளும் கோல் அடிக்க மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. இதனால் ஆட்டத்தின் இறுதியில் ஆர்ஜென்டினா அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அத்துடன் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் இறுதிப். போட்டியில் ஸ்பெயின் அணியை ஆர்ஜென்டீனா எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## மெஸ்ஸி கையில் தவழ்ந்த குழந்தை அவருக்கே போட்டியாக களத்தில்!



உலக கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப்போட்டி, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (19) நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி கால்பந்து வரலாற்றில் ஒரு மறக்க முடியாத தருணமாக அமையவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் ஆர்ஜென்டினா மற்றும் ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன.

இந்த ஆட்டத்திற்கு முன்னதாக, சமூக வலைதளங்களில் ஒரு பழைய புகைப்படம் மீண்டும் வைரலாகி வருகின்றது.

19 ஆண்டுகளுக்கு முன்பு, இளம் வயது லியோனல் மெஸ்ஸி, ஒரு பச்சிளம் குழந்தையை நீராட்டும் புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்தப் படத்தில் இருப்பது தற்போதைய ஸ்பெயின் அணியின் இளம் நட்சத்திரமான லமின் யமால் என்பது தான் ஆச்சரியமான உண்மை.

இந்தச் சுவாரசியமான புகைப்படம் 2007-ஆம் ஆண்டு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்சிலோனா கால்பந்து கழகம் மற்றும் "ஸ்போர்ட" உள்ளூர் நாளிதழ் இணைந்து ஒரு நாட்காட்டியைத் தயாரிப்பதற்காக இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது.

இந்தத்திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட நிதி, யுனிசெப் மற்றும் பிற தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

பார்சிலோனா அணியின் வீரர்களுடன் குழந்தைகளை வைத்து புகைப்படம் எடுப்பதே அந்தத் திட்டத்தின் நோக்கம். இதில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பங்கேற்றன.

அப்போதுதான் தனது கால்பந்து பயணத்தைத் தொடங்கிக் கொண்டிருந்த லியோனல் மெஸ்ஸியுடன், பச்சிளம் குழந்தையான லமின் யமால் புகைப் படம் எடுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்று மெஸ்ஸியின் கைகளில் குளித்த அதே குழந்தை, இன்று கால்பந்து உலகின் உச்ச நட்சத்திரமாக வளர்ந்து, அதே மெஸ்ஸிக்கு எதிராக கால்பந்து கிண்ண இறுதிப்போட்டியில் களமிறங்குகிறது.

கால்பந்து உலகின் "தற்போதைய ஜாம்பவான்" மற்றும்" எதிர்கால நட்சத்திரம்" மோதிக்கொள்ளும் இந்தத் தருணத்தை ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். (3)

## தேசிய கபடிப் போட்டியில் சம்பியனான யாழ்.மகளிர் அணியினர் கௌரவிப்பு



தேசிய கபடி போட்டியில் முதலிடம் பிடித்த யாழ் மகளிர் அணியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம் பெற்றது.

36 ஆவது தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட போட்டியில் யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மகளிர் கபடி அணி தேசிய ரீதியில் முதலிடத்தை கைப்பற்றியது.

இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மகளிர் கபடி அணியுடன் மோதியதன் அடிப்படையில் வட மாகாணத்தைச் சேர்ந்த இரு அணிகள் இறுதிப் போட்டியில் மோதியமை விசேட அம்சமாகும்.

குறித்த போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகள் யாழ் மாவட்ட செயலக முன்வாயிலில் வைத்து மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் வெற்றி ஈட்டிய வீராங்கனைகள் பதக்கம் அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் யாழ் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ் மாவட்ட உதவி பணிப்பாளர் வினோதினி, உத்தியோகத்தர்களான யுவராஜ் அகிலன் உட்பட பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் நடுப்பகுதி வரை டெங்கு பரவும் அபாயம் அதிகம்

## சுகாதார அமைச்சர் எச்சரிக்கை



(கொழும்பு)

**எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப் பகுதி வரை டெங்கு நோய் பரவுவதற்கான அதிக அபாயகரமான சூழ்நிலை நிலவக்கூடும் என சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரித்துள்ளார்.**

எனவே, நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத் துறையினர் முன்னெடுக்கும் டெங்கு ஒழிப்புத் திட்டங்களுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குமாறு அவர் பொது மக்களிடம் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்கள், தாங்கள் வசிக்கும் வீடுகள், பாடசாலைகள் மற்றும் பணியிடங்களைச் சுற்றியுள்ள வளாகங்களை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது கம்பஹா மாவட்டத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடு பூராகவும் நிலவும் டெங்கு அபாயத்தைக் கருத்திற்கொண்டு, 11 மாவட்டங்களை இலக்கு வைத்து நேற்றுமுதல் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டங்களை மையப்படுத்தி இந்த விசேட ஒழிப்புத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர குறிப்பிட்டுள்ளார். (நி)

# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க கோரிய மனு

## நீதிமன்றத்தின் முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர பத்திர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பான உத்தரவு எதிர்வரும் 23ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் குழுவினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் தரப்பு மற்றும் சட்ட மா அதிபர் சார்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி, மனுவை முழுமையான விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அனுமதி தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 23ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. (நி)

# மக்கள் அதிகம் நம்பும் தலைவராக அநுர

## சாந்த பத்மகுமார எம்.பி பெருமிதம்



(கொழும்பு)

இலங்கை மக்கள் அதிகம் நம்பும், திருப்தியடையும் ஒரே தலைவராக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விளங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மாற்று கொள்கைக்கான நிலையம் அண்மையில் நடத்திய ஆய்வின் தரவுகளின்படி, 75.5% சதவீதமான மக்கள் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# அமெரிக்காவிடம் இருந்து இலங்கைக்கு மேலதிக வரிச்சலுகைகள் சாத்தியம்

## என்கிறார் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர்



(கொழும்பு)

அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு எதிர் காலத்தில் மேலதிக வரிச் சலுகைகள் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டாய உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் இறக்குமதிக்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் தடை விதித்துள்ளதால், அமெரிக்காவிடம் இருந்து எதிர் காலத்தில் இவ்வாறு மேலதிக வரிச் சலுகைகளை எதிர்பார்க்க முடியும் எனத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆடைகளுக்கு அமெரிக்கா விதிக்கத் திட்டமிட்டிருந்த 12.5% மேலதிக வரி, அரசாங்கத்தின் புதிய வர்த்தமானி அறிவித்தல் காரணமாகச் சாதகமாக மாற்றியமைக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வியட்நாம், பங்களாதேஷ் போன்ற போட்டி நாடுகளுக்கு 10% வரி விதிக்கப்பட்டுள்ள பின்னணியில், இலங்கையின் ஆடைத் தொழில்துறையைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த அதிரடி வர்த்தமானி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கட்டாய உழைப்பால் தயாரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சுங்கப் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது புதிய சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# கதிர்காமம் நோக்கிச் சென்ற பேருந்துடன் மோதிய மோட்டார் சைக்கிள்

## இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு



(அம்பாறை)

அம்பாறை - மருதமுனை பிரதான வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மருதமுனை பகுதியில் உள்ள பெட்ரோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச பேருந்தொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஜெயராமன் ஜெகதீஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கஞவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் பணியாற்றி வந்தவர் எனவும், கல்லடியைச் சேர்ந்தவர் எனவும், திருமணத்தின் பின் தற்போது பாண்டியிருப்பு பகுதியில் வசித்து வந்தவர் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# முதியோர் இல்லங்களை பதிவு செய்ய செப்ரெம்பர் வரை காலக்கெடு விதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் பதிவு செய்யப்படாமல் இயங்கி வரும் முதியோர் இல்லங்கள் அனைத்தும் செப்டம்பர் 30ஆம் திகதிக்குள் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என முதியோர் செயலகம் அறிவித்துள்ளது.

இது குறித்து முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் சதுர மிஹிதும், விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் தற்போது 459 முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் இதுவரை 148 இல்லங்கள் மட்டுமே முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்படாத ஏனைய முதியோர் இல்லங்கள் அனைத்தையும் எதிர்வரும் செப்டம்பர் 30-ஆம் திகதிக்குள் பதிவு செய்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பதிவு செய்யத் தவறும் முதியோர் இல்லங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெய்வீக இசை அரங்கம்

(கரணவாய்)

சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக " தெய்வீக இசை அரங்கம்" இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் திருமதி.சுகிர்தினி பிரபுவின் (சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை வாய்ப்பாடு) தெய்வீகப் பாடல்கள் இடம்பெறும்.


இந் நிகழ்வில் இசைக்கலைமணி நடேசு செல்வச் சந்திரனின் பின்னணி இசையுடன் ஏனைய அணிசெய் கலைஞர்களும் பங்கேற்கவுள்ளனர். (8-60)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(உடுவில்)

கலாசார அலுவலகள் திணைக்களத்தின் உடுவில் பிரதேச கலாசார அதிகார சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளங்கலைஞர்கள் மற்றும் மூத்த கலைஞர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (14) பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகரால் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்க அங்கத்தவர்களும் பங்குபற்றியிருந்தனர். (படம்- மகாலிங்கம்)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய தேவி திவ்விய மகோற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (8)



வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனைநின்றான் கிராமத்திற்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள பாலத்தை புதிதாக அமைப்பதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை (14) அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் 67 பேருக்கு டெங்கு கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 67 பேருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.



வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் குறித்தான கலந்துரையாடலொன்று, நேற்றைய தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

தற்போது வவுனியா மாவட்டத்தில் 67 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், வவுனியா நகரத்தை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு நோய் வேகமாக பரவி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

முறையற்ற கழிவகற்றல், நீர் தேங்கி காணப்படல் மற்றும் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்ற சூழல் நகரத்தில் காணப்படுகின்றமை போன்ற காரணங்களால் வவுனியா மாவட்டத்தில் டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக இக்கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கமைய அரச நிறுவனங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களை உள்ளடக்கும் வகையில் பல்வேறு டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் நா.கமலதாசன் ஆகியோர் உட்பட முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

# தங்கரதத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆடிப்பிறப்பு நன்னாளான இன்று யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் சுக்கிர வாரத் திருவிழா இடம்பெறவுள்ளது.

மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட தங்க ரதத்திலே அம்பிகை திருவீதி வலம் வரும் காட்சி இன்று மாலை 5.15 மணிக்கு இடம்பெறும். (8)

# ஆடிப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 199 ஆடியபாதம் வீதி, திருநெல் வேலி கிழக்கு யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் கி.அருட்செல்வி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தமிழ்ச் சங்க பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வாழ்த்துரையையும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வேல்.நந்தகுமார் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (8)



யாழ் மாநகர சபைக்குட்பட்ட நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் பகுதியில் கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பாலமொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் யாழ் மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா உள்ளிட்டோரின் பங்கேற்புடன் கடந்த செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்



(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் கொள்வனவு முள்ளியவளை கமநல சேவை நிலைய நெல் களஞ்சியசாலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒரு விவசாயிடம் இருந்து 2500 kg நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் நெல் களஞ்சியசாலையிலும், மூன்று முறிப்பு நெல் களஞ்சிய சாலையிலும் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எபோலா வைரஸ்

## கொங்கோவில் கோரத்தாண்டவம்



(கொங்கோ)

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் எபோலா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,011 ஆக உயர்ந்துள்ளதுடன், இதுவரை 754 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமான இந்த எபோலா நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் போதிலும், தொற்றின் வேகம் இன்னும் கட்டுக்குள் வரவில்லை என உலக சுகாதார அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

கொங்கோ சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அண்மைக் காலத் தரவுகளின்படி, எபோலா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 366 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

எனினும், தற்போது 753 பேர் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, அவர்களுக்கு அவசரச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கொங்கோவில் பரவி வரும் எபோலா வைரஸானது, 'புண்டிபுகியோ' என்ற ஆபத்தான வகையைச் சேர்ந்தது என மருத்துவ ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த குறிப்பிட்ட வகை எபோலா தொற்றுக்கு உலகளாவிய அங்கீகாரம் பெற்ற தடுப்பூசிகளோ அல்லது பிரத்யேக மருந்து சிகிச்சைகளோ இதுவரை கண்டறியப் படவில்லை.

பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான மருத்துவக் கட்டமைப்பு இல்லாத இந்தச் சூழல், அந்நாட்டு நோய் தடுப்புப் பணிகளில் மிகப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

எபோலா பரவல் ஒருபுறம் தீவிரமடைந்து வரும் நிலையில், மறுபுறம் தங்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படாததை எதிர்த்துக் கொங்கோவில் உள்ள சுகாதார மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியசாலை ஊழியர்களின் இந்த அதிரடிப் போராட்டத்தினால், உயிருக்குப் போராடும் எபோலா நோயாளர்களுக்குச் சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பதில் பெரும் தாமதமும் தடைகளும் ஏற்பட்டுள்ளதாகக் கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# வாய்ப்புற்று நோயால் நாளொன்றுக்கு மூன்று மரணங்கள் பதிவு

(கொழும்பு)

**வாய் புற்றுநோய் காரணமாக நாட்டில் நாளொன்றுக்கு மூன்று மரணங்கள் பதிவாகி வருவதாக வாய் மற்றும் தாடை அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் தனுஜா தக்ஷனி பதிராஜ தெரிவித்துள்ளார்.**


சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையில் ஆண்களுக்கு மத்தியில் மிகவும் பரவலாகக் காணப்படும் புற்றுநோய் வகையாக வாய் புற்றுநோய் காணப்படுவதோடு, இலங்கைப் பெண்களுக்கு மத்தியில் அதிகளவில் பதிவாகும் 10 புற்றுநோய் வகைகளுக்குள்ளும் வாய் புற்றுநோய் உள்ளடங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகையிலை, சிகரெட் மற்றும் மதுபானப் பயன்பாடு ஆகியவை வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாக அமைந்துள்ளதோடு, குறிப்பாக வெற்றிலை மெல்லும்போது பயன்படுத்தப்படும் பாக்கில் அடங்கியுள்ள புற்றுநோய் காரணி மிகவும் ஆபத்தானது மற்றும் சக்தி வாய்ந்தது என வைத்தியர் இங்கு வலியுறுத்தியுள்ளார்.

தினசரி தொழில்களில் ஈடுபடும் சில குறிப்பிட்ட துறைகளைச் சேர்ந்த சமூகத்தினர் இதன் தாக்கத்திற்கு அதிகம் உள்ளாவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்கள், மீனவச் சமூகம், மாணிக்கக்கல் மற்றும் சுரங்கத் துறையில் ஈடுபடுபவர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோர் இவர்களுள் அடங்குவர்.



தங்களது பணிச் சூழலில் ஏற்படும் அதிகப்படியான மன அழுத்தம், சோர்வு மற்றும் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக இவர்கள் பெருமளவில் வெற்றிலை மெல்லுதல், புகையிலை மற்றும் சிகரெட் பயன்பாடுகளுக்குப் பழகியிருப்பதே இதற்கான அடிப்படைக் காரணம் என வைத்தியர் தனுஜா தக்ஷனி பதிராஜ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த அழிவுகரமான பழக்கவழக்கங்களில் இருந்து விலகியிருக்குமாறும், வாயில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து தொடர்ச்சியாக அவதானத்துடன் இருக்குமாறும் சுகாதாரத் துறையினர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி)

## எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணைகள்

# வெறும் ஊடக நாடகங்களே

## நளிந்த சாடல்



(கொழும்பு)

நாட்டில் எழும் எந்தவொரு சாதாரணப் பிரச்சினையையும் அரசியல் இலாபத்துக்காகப் ஜி. எல். பீரிஸின் இல்லத்தில் கூடி நம்பிக்கையில்லாப் பிரேரணைகளாகத் தயாரிப்பது எதிர்க்கட்சியினரின் வாடிக்கையாகி விட்டது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சாடியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் டெங்கு நோய் பரவல், சிறைச்சாலை நெருக்கடிகள், வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை பேரிடர்கள் அல்லது நிலக்கரி கப்பல் வருகை தாமதமாவது போன்ற எந்தவொரு விடயம் ஊடகங்களில் செய்தியாக வந்தாலும், எதிர்க்கட்சியினர் உடனே பதறியடித்துக்கொண்டு ஜி.எல். பீரிஸின் வீட்டிற்கு ஓடுகிறார்கள்.

அங்கு ஒன்று கூடி கலந்துரையாடிவிட்டு, அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைத் தயாரிப்பதாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

ஆனால், அவ்வாறு திட்டமிட்டுத் தயாரிக்கப்படும் பிரேரணைகளில் பெரும்பாலானவை பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படுவதே இல்லை. கடந்த காலத்தில் பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்போவதாகக் கூறி, கல்வி அமைச்சுக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி நாடக மாடினார்கள்.

இறுதியில் அந்தப் போராட்டங்களும் கைவிடப்பட்டு, பிரேரணைகள் பற்றிய பேச்சே இல்லாமல் போனது.

எனவே, இவ்வாறான வெற்றுப் பிரேரணைகளால் அரசாங்கத்திற்கு எந்தப் பாதிப்பும் இல்லை என அவர் தெரிவித்தார். (நி)

## தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மற்றும் கட்டாய ஆசிரியர் இடமாற்றத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, விண்ணப்பங்கள் ஜூலை 16 முதல் ஜூலை 30, வரை தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற இணையத் தளத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள், தங்களது விண்ணப்பத்தை இணையவழியில் பூர்த்தி செய்து அதன் அச்சுப் பிரதியைப் பெற்று, தங்களது சம்பளம் வழங்கப்படும் பாடசாலையின் அதிபரிடம் 2026 ஜூலை 31 ஆம் திகதிக்குள் ஒப்படைக்க வேண்டும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், அச்சிடப்பட்ட விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகத்தின் ஊடாக இடமாற்ற நடைமுறைக்காக அனுப்பப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஆசிரியர்கள் நேரடியாக கையளிக்கும் அல்லது தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும், தகுதியுடைய அனைத்து ஆசிரியர்களும் இணையவழி முறையை மட்டுமே பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை பின்பற்றுமாறும் அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அமைச்சின் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக தேசியப் பாடசாலைகளுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்களை எளிதாக்கும் நோக்கில் இந்த வருடாந்த மற்றும் கட்டாய இடமாற்றத் திட்டம் ஆண்டுதோறும் நடைமுறைப் படுத்தப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாரதம்

# அகமதாபாத் விமான விபத்து
## இறுதி விசாரணை அறிக்கை ஒக்டோபரில்!



(டில்லி)

ஏர் இந்தியா விமான விபத்து குறித்த இறுதி விசாரணை அறிக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் தயாராகிவிடும் என உச்ச நீதிமன்றத்தில் விமான விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.


கடந்த வருடம் ஜூன் மாதம் அகமதாபாத் விமானநிலையத்திலிருந்து புறப் பட்ட ஏர் இந்திய விமானம் கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் 260 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்து தொடர்பாக விசா ரணை நடத்தி வரும் புலனாய்வு அமைப்பு உச்சநீதி மன்றத்தில் பிரமாணப்பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளது.

அதில், அகமதாபாத் விமான விபத்தின் காக்பிட் குரல் பதிவுகள் உள்ளிட்ட தகவல்களை வெளிநாட்டு குழுவிற்கு கொடுப்பதோ அல்லது பொதுவெளியில் வெளியிடுவதோ விதிகளை மீறிய செயலாகும் எனவும் வெளிநாட்டு சேவையை வழங்கும் விமானம் விபத்துக்குள்ளானமை உள்நாட்டு விசாரணைக்குரிய விடயமல்ல, இது ஒரு சர்வதேச விசாரணைக்குரிய விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சாத்தியக்கூறுகளின்படி, விரிவான விசாரணை நடவடிக்கைகள் தோராயமாக 6 வாரங்களுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பின்னர், பகுப்பாய்வு முடிவடைந்ததும் இறுதி விசாரணை அறிக்கை ஒக்டோபரில் தயாராகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# எதிரிகளைத் ...
## ஈரானிய படைகளுக்...



(டெஹ்ரான்)

**எதிரியின் ஆக்... எதிராகச் செய... ஆயுதப்படைகளுக்கு... சுதந்திரம் வழங்க... ஈரான் அறிவித்துள்...**

அமெரிக்காவின் தொடர் தாக்குதல்களில் ஈரான் இராணுவத்தைச் சேர்ந்த ஏழு வீரர்கள் உயிரிழந்ததையடுத்து, இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஈரானின் முக்கிய பேச்சுவார்த்தையாளரான முகமது பாகர் காலிபாஃப், ஈரான் அமெரிக்காவுடன் ஒரு "இருப்புக்கான போரில்" ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா தனது வான்வழித் தாக்குதல்களை ஹார்முஸ் நீரிணை மற்றும் கிரேட்டர் டுன்பு தீவு ஆகிய பகுதிகளில் நடத்தியுள்ளது.

அத்துடன் ஈரானில் உள்ள ஒரு இராணுவ முகாமின் மீது நடந்த தாக்குதலில் 388ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த ஏழு வீரர்கள் உயிரிழந்தனர்.

ஈரான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் கோதுமை சேமிப்பு நிலையம் ஒன்றும் தாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், இதை அமெரிக்க இராணுவம் மறுத்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் துறைமுகங்களுக்கு எதிரான புதிய முடக்

### மியன்மார் உள்நாட்டுப் போர்
# அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இருதரப்பும் சம்மதம்



(நைப்பியிதோ)

மியன்மாரில் தொடர்ந்து நீடித்து வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர, அங்குள்ள இராணுவத் தரப்பும் கிளர்ச்சியாளர் குழுக்களும் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தாய்லாந்து வெளியுறவுத் துறை அமைச்சர் சிஹாசக் புவாங்கேட்கியோ தெரிவித்துள்ளார்.

இந்த மோதலுக்கு இராணுவ ரீதியாக எந்தத் தீர்வும் காண முடியாது என்பதை இரு தரப்பினருமே ஒப்புக்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் கடந்த 2021ஆம் ஆண்டு நடந்த இராணுவப் புரட்சிக்குப் பிறகு, அங்கு ஏற்பட்டுள்ள வன்முறைகளில் சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர், இலட்சக்கணக்கானோர் தங்களது வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான உதவிகளையும், அதற்கான இடத்தையும் வழங்கத் தயாராக இருப்பதாகத் தாய்லாந்து அறிவித்துள்ளது.

இது மியன்மாரில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஆசியான் கூட்டமைப்பு எடுத்து வரும் முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

ஆசியான் அமைப்பின் சிறப்புத் தூதரான பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சர் மரியா தெரசா லாசரோ மற்றும் தாய்லாந்து அதிகாரிகள், மியன்மார் இராணுவ ஆதரவு பெற்ற தேசிய ஒற்றுமை மற்றும் அமைதிப் பேச்சுவார்த்தைக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். (3)

# கருணைக்கொலை...
## பிரான்ஸ் பாராளும...

(பாரீஸ்)

குணப்படுத்த முடியாத மற்றும் கடுமையான உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் தங்களது விருப்பத்தின் பேரில் உயிரை மாய்த்துக் கொள்ளும் "உதவிகரமான இறப்பு" சட்டமூலத்திற்குப் பிரான்ஸ் பாராளுமன்றத்தின் கீழ் அவை அனுமதி அளித்துள்ளது.

சுமார் 14 ஆண்டுகால பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் போராட்டங்களுக்குப் பிறகு இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் அனைவருக்கும் பொதுவானது அல்ல. கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் மட்டுமே இது அனுமதிக்கப்படும்.

பிரான்ஸ் குடிமக்கள் அல்லது அங்கு சட்டப்பூர்வமாக வசிக்கும் தகுதியுடைய, உயிருக்கு ஆபத்தான இறுதிக்கட்ட நோயால் பாதிக்கப்பட்டு, தொடர்ந்து கடுமையான உடல் ரீதியான துன்பங்களை அனுபவித்து வரும் நபர்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.


பிரான்ஸ் தேசிய சபையின் கீழ் அவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில், இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 291 வாக்குகளும், எதிராக 241 வாக்குகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

## தகர்த்தெறிய

## க்கு முழு சுதந்திரம்!



...க்கிரமிப்பிற்கு ...யற்பட தனது ...க்கு முழுமையான ...கப்பட்டுள்ளதாக ...ுள்ளது.

கத்தை அமெரிக்கா அமுல்படுத்தியுள்ளது.

2026 ஜூன் 17 அன்று மேற்கொள்ளப்பட்ட இடைக்கால அமைதி ஒப்பந்தம், தற்போதைய அமெரிக்கத் தாக்குதல்களால் செயலிழந்துவிட்டதாக ஈரான் அறிவித்துள்ளது.

அமெரிக்கா தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாத வரை, ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈரானின் கடமைகள் செல்லாது என்று ஈரான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் தற்போதைய நிலையில் வோஷிங்டனுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் எதுவுமில்லை என்றும் ஈரான் கூறியுள்ளது.

இதற்கிடையில், தன் மீதான தாக்குதல்களுக்குப் பதிலடியாக, பஹ்ரைனில் உள்ள அமெரிக்க ஐந்தாவது கடற்படை மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரானிய புரட்சிகர காவல் படை தெரிவித்துள்ளது. (3)

# மியன்மாரில் இரு படகுகள் கவிழ்ந்ததாக அச்சம்

## கவலை வெளியிட்டுள்ள ஐ.நா





(நைப்பியிதோ)

மியன்மாரில் நீடித்துவரும் வன்முறைகளில் இருந்து தப்பிப்பதற்காகப் படகுகள் மூலம் கடல்வழியாகப் பயணித்த 500 இற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள், மோசமான வானிலையினால் படகுகள் கவிழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் இரு முக்கிய இடம்பெயர்வு அமைப்புகள் வியாழக்கிழமை (16) கவலை வெளியிட்டுள்ளன.


சர்வதேச இடம்பெயர்வுக்கான அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில்,

கடந்த ஜூன் மாத இறுதியில் மியன்மாரின் மேற்கு ராகினே மாநிலத்திலிருந்து சுமார் 250 பயணிகளுடன் புறப்பட்ட படகு ஒன்று, புறப்பட்ட சில நாட்களிலேயே தொடர்பை இழந்து காணாமல் போயுள்ளது. சுமார் 280 பயணிகளுடன் பயணித்த மற்றுமொரு படகு, கடந்த ஜூலை 8 ஆம் திகதி மியன்மாரின் அயேயர்வாடி கடற்கரைக்கு அப்பால் கடலில் மூழ்கியுள்ளதாக நம்பப்படுகிறது.

வழக்கமான கடல் பயணக் காலம் அல்லாத, மிக மோசமான கடல் கொந்தளிப்பு, பலத்த மழை மற்றும் பிராந்திய வெள்ளப் பெருக்கு நிலவும் தற்போதைய ஆபத்தான சூழ்நிலையிலேயே இந்த இரு படகுகளும் பயணித்துள்ளன.

இந்த விபத்துக்கள் இன்னும் உத்தி யோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படாத போதிலும், பெருமளவிலான உயிர் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என ஐநா அமைப்புகள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன. (3)

## ல சட்டமூலத்துக்கு நமன்றம் அனுமதி



அளிக்கப்பட்டன.

வலதுசாரி மற்றும் பழமைவாதக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் பாராளுமன்றத்தின் மேலவையை தவிர்ப்பதற் காக, அரசாங்கம் ஒரு சிறப்பு அரசியலமைப்பு விதியைப் பயன்படுத்தியுள்ளது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், இது உடனடியாகச் சட்டமாகாது.

பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு தெரிவித்துள்ளபடி, இந்த சட்டமூலம் இறுதி தீர்மானத்திற்காகப் பிரான்சின் மிக உயரிய அரசியலமைப்பு அமைப்பான அரசியலமைப்பு கவுன்சிலுக்கு அனுப்பப்படும்.

இந்த கவுன்சில் சட்டமூலத்தை முழுமையாக ஆராய்ந்து அனுமதி அளித்த பின்னரே இது உத்தியோகபூர்வ சட்டமாக நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# மூச்சைத்திணற வைக்கும் கனடாவின் காட்டுத்தீ

(ஒட்டாவா)

வடமேற்கு ஒன்ராறியோவிலிருந்து பரவிய காட்டுத்தீயின் புகை பகல் நேர வானத்தை இருளாக்கியதோடு, வடகிழக்கு அமெரிக்காவிலும் பரவியதால், சுகாதார எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு, குடியிருப்பாளர்கள் வெளிப்புற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு அழைப்புகள் விடுக்கப்பட்டன.

இதன் விளைவாக, புதன்கிழமை (15) அன்று உலகளாவிய முக்கிய நகரங்களிலேயே டொரண்டோவின் காற்றின் தரம் மிகவும் மோசமானதாக மதிப்பிடப்பட்டது.

டொரண்டோவிலிருந்து நூற்றுக்கணக்கான மைல் தொலைவில், மக்கள் தொகை குறைவாக உள்ள பகுதிகளில் காட்டுத்தீ கடுமையாகப் பரவி, பரந்த நிலப்பரப்பில் புகையை உண்டாக்கி வருகிறது.

எனினும், கனடாவின் சுற்றுச்சூழல் துறை, டொராண்டோவிற்கான காற்றின் தர சுகாதாரக் குறியீட்டு அளவு 10 இற்கும் அதிகமாக உள்ளதாகவும் இது "மிகவும் அதிக அபாயம்" என வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவித்தது.

அதேவேளையில், அபாயகரமான இந்தச் சூழல் வியாழக்கிழமை (16) இரவு வரை நீடிக்கக்கூடும் என வானிலை முன்னறிவிப்புகள் தெரிவித்தன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று அண்டை மாநிலமான நியூ ஜெர்சியில் கால்பந்து உலகக் கிண்ண இறுதிப் போட்டி நடைபெறவுள்ள நிலையில், அதற்குச் சில நாட்களுக்கு முன்பே நியூயோர்க் நகரம் அதன் தாக்கத்தை உணரத் தொடங்கியுள்ளது.

காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியதையடுத்து உள்ளூர் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் வெளியே இருப்பவர்கள் கடுமையான வெளிப்புறச் செயற்பாடுகளைக் குறைத்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் வார இறுதி வரை புகை நீடிக்கக்கூடும் என்று தேசிய வானிலை சேவை தெரிவித்துள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மன்னார் மாவட்டத்தின் விவசாயக்குழுக் கூட்டம்

(மன்னார்)

எதிர்வரும் எல் நினோ காலநிலைத் தாக்கத்தை எதிர்கொள்ளும் முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான விசேட விவசாயக் குழுக் கூட்டம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

எல் நினோ காலநிலை மாற்றம் விவசாயத் துறையில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளை கருத்தில் கொண்டு, அதனை எதிர்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பயிர்ச்செய்கைத் திட்டமிடல் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எம். பிரதீப், மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு, விவசாயத் திணைக்கள அதிகாரிகள், ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் கமக்காரர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (8-285)



கிளாலி வளர்மதி முன்பள்ளி சிறார்களின் சிறுவர் சந்தை நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிராம அலுவலர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள், மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>7இல்செவ்<br>கி-பா-50<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16843 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி-பா- 69<br>12இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HND IT, IT Field<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16840 |
| பிறப்பு:1995-RC<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்- Bsc, Msc, IT Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16844 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>6இல்சூரிசெவ்<br>கி-பா-9 1/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L.பாடசாலை அலுவலக வேலை<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16842 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>8இல்சூரிசெவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Bsc. மின்சார பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16845 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி-பா-45<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT Field<br>தொ.இ: G/16848 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி-பா-23 ¼<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்-A/L,Bank Credit Officer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16846 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி-பா-37<br>11இல்சூரிசெவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16849 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>7இல் செவ்<br>கி-பா- 16<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Bsc, Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16847 | பிறப்பு-1997 - இந்து<br>நட்சத்திரம்-கேட்டை<br>2இல்செவ்<br>கி-பா- 29 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc,QA- உயர் பதவிகள்.சைவபோசனம்<br>தொ.இ: G/16853 |

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 618

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## மன்னிக்க வேண்டும்!

ஒரு ஊரிலே ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒரு நாள் தம்முடைய அரசாங்க கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

வரவு எவ்வளவு-செலவு எவ்வளவு என்பதைப் பற்றியெல்லாம் அதிகாரிகள் விவரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அரசாங்கத்திடம் கடன் வாங்கி அதை இன்னும் திருப்பிக் கட்டாதவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்று விசாரித்துக் கொண்டிருந்தார்.

அந்த சமயத்திலே ஒரு ஆளை அரசாங்க ஊழியர்கள் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

இந்த ஆள் பத்தாயிரம் காசுகள் அரசாங்கத்துக்கு கடன் பட்டிருக்கார்!" என்றார்கள்.

ஐயா! இப்போ என்னுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது ! அந்தக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கின்றேன்!" என்றார் அந்த ஆள்.

மன்னர் பார்த்தார், "அப்படி என்றால் இவனையும் இவனுடைய நிலங்களையும் இவனுடைய வீடு வாசலையும் இன்னும் என்ன இருக்கிறதோ அவ்வளவையும் விற்று அரசாங்கப் பணத்தை ஈடு கட்டுங்கள்!" என்று உத்தரவு போட்டுவிட்டார்.

உடனே அந்த ஆள் பொத்- என்று காலிலே விழுந்தான்.

"ஐயா... என்னை மன்னித்துவிடுங்கள். கூடிய சீக்கிரம் எப்படியாவது என்னுடைய கடனைத் தீர்த்துவிடுகின்றேன்!" என்றான்.

மன்னிப்பு என்று கேட்டுவிட்டான்இல்லையா? அதனாலே உடனே மன்னர் மனசு மாறிப்போச்சு. அவனை விடுதலை செய்துவிட்டார். அவனுடைய கடன் தொகையையும் தள்ளுபடி செய்துவிட்டார். போய் வா என்று சொல்லிவிட்டார்.

அவ்வளவுதான். இவன் ஆனந்தமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் வீட்டிலே வேலை செய்கின்ற ஒருத்தன் இவனிடம் கடன் பட்டிருந்தான். அவன் இவனுக்கு ஆயிரம் காசுகள் தரவேண்டியிருந்தது.

"எப்போது தரப்போகிறாய்?" என்று கேட்டான். அவன் முழித்தான். இவன் அவன் கழுத்தைப் பிடித்து நெரிக்க ஆரம்பித்தான். அவன் கத்தினான். காலிலே விழுந்தான். என்னை மன்னித்துவிடுங்கள். எப்படியாவது கடனை திருப்பித் தந்துவிடுகிறேன்! என்றான்.

அவன் இரக்கப்படவே இல்லை . கோர்ட்டுக்குப் போனான். இவனுக்குச் சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டான்.

சிறிது நாட்களிலே இந்த விடயம் மெதுவாக மன்னருடைய காதுகளுக்கு எட்டியது. சிறையில் இருந்தவனின் நண்பர்கள் சில பேர் இதை மன்னரிடம் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

உடனே அந்த ஆளைக் கூப்பிட்டார்.

"இதோ பார் நீ என்னிடம் கடன்பட்டிருந்தாய். ஆனால் மன்னிப்பு கேட்டாய் கொடுத்தேன். ஆனால் உன்னிடம் கடன்பட்டிருந்தவன் மன்னிப்பு கேட்டு இருக்கிறான். நீ மன்னிக்க மறுத்துவிட்டாய்.

நான் உன்னுடைய கடனை தள்ளுபடி செய்தேன். நீ அவனை சிறையிலே தள்ளியிருக்கிறாய்.

நான் உன்னிடம் இரக்கம் காட்டியது போல நீயும் உன்னுடைய வேலையாளுக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் இல்லையா? நீ இரக்கம் காட்டவில்லை. அதனாலே உன் கடன் தீரும் வரை உன்னையும் சிறையிலடைக்க உத்தர விடுகின்றேன்! என்றார்.

இவனையும் சிறையிலே கொண்டு போய் தள்ளி கதவைச் சாத்தினார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? மன்னிப்பை விரும்புகிறவர்கள் மன்னிப்பதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

எனக்கு எதிராகப் பாவம் செய்கிறவர்களை நான் எத்தனை தடவை மன்னிக்கலாம்? என்று இயேசுவின் சீடர்களில் ஒருவரான இராயப்பர் கேட்கிறார்.

இதற்கு இயேசு சொல்கிறார். "எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிக்கலாம்!"

இந்த மனோபாவம் மனிதனை மனிதனாக்கும். மனித குலத்தை மேம்படுத்தும்.

இந்தக் காலத்தில் உள்ளவர்கள் இதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தவறாக புரிந்து கொண்டு தடுமாறக்கூடாது!

எத்தனை தடவை வேண்டுமென்றாலும் என்னை மன்னிப்பதற்குத் தயாராக இருக்கிறீர்களா அப்பா? என்று கேட்டான் ஒரு பையன்.

தயாராக இருக்கிறேன்! என்றார் அப்பா.

அப்படியென்றால் மூன்றாவது தடவையாக உங்களிடம் ஒரு மன்னிப்பு கேட்கிறேன்! என்றான்.

என்னடா விஷயம் ? என்றார் அப்பா.

இந்தத் தடவையும் நான் கணக்கில் பெயில்! என்றான் பையன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காசோலைகள் வழங்கி வைப்பு



(தருமபுரம்)

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி ஒதுக்கீட்டில், கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் டித்வா புயலினால் வீடுகளை இழந்த மற்றும் பகுதி அளவில் வீடுகள் சேதத்துக்குள்ளானவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு ஒருங்கிணைப்பாளர் மருங்கன் மோகன் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் கண்டாவளை பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த காசோலையினை வழங்கி வைத்தனர். (8-316)


# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# கொங்கோ காடுகளில் புதிய குரங்கு இனம் கண்டுபிடிப்பு



மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அடர்ந்த காட்டுப்பகுதியில், எடுப்பான இளஞ்சிவப்பு-ஓரஞ்சு நிற உதடுகளையும், கறுத்த முகத்தையும் கொண்ட விசித்திரமான குரங்கு இனம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 75 ஆண்டுகளில் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட 5 ஆவது குரங்கு இனம் இதுவாகும்.

கொங்கோவின் மத்திய-கிழக்கு பகுதியில் உள்ள லோமாமி தேசிய பூங்காவின் அடர்ந்த வெப்பமண்டல காடுகளில், மிக உயரமான மரங்களின் உச்சியில் இக்குரங்குகள் வாழ்கின்றன.

இக்குரங்குகள் மிகவும் வெட்கப்படும் குணம் கொண்டவை என்பதால், மரங்களின் உச்சியிலேயே ஒளிந்து வாழ்கின்றன.

தாவரங்களை மட்டுமே உண்ணும் இக்குரங்குகள், காடுகளின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதிலும், விதைகளைப் பரப்புவதிலும், காடுகள் உருவாவதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசித்திரமான குரங்குகள் இறைச்சிக்காக வேட்டையாடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. தற்போது இது ஒரு தனித்துவமான இனம் என்று உத்தியோகபூர்வமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இதற்குச் சட்டப்பூர்வ வனவிலங்குகளுக்கான பாதுகாப்பை வழங்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 300 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | -- | 200 | -- |
| பச்சைமிளகாய் | 1000 | 900 | 1300 | 900 | 1200 | 1000 |
| தக்காளி | 450 | 500 | 500 | 450 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 280 | 200 | 180 |
| கரட் | 400 | 360 | 400 | 350 | 400 | 350 |
| பூசணி | 200 | 240 | 180 | 150 | 200 | 180 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 180 | 110 | 160 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 350 | 400 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 180 | -- | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 900 | 600 | 700 | 600 | 500 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 200 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 350 | 350 | 400 | -- |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 350 | 250 | 350 |
| லீக்ஸ் | 400 | 300 | 300 | 300 | 350 | 300 |
| பீற்றூட் | 300 | 400 | 500 | 400 | 300 | 350 |
| கறிமிளகாய் | 400 | 500 | 600 | 400 | 800 | 550 |
| முருங்கைக்காய் | 300 | 450 | 500 | 300 | 400 | 450 |
| போஞ்சி | 600 | 400 | 500 | 400 | 500 | 400 |
| தம்புள்ள-கத்தரி | 250 | 250 | 300 | -- | 350 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 30 | 100 | -- |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 150 | 450 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 120 | 80-120 | -- |
| இராசவள்ளி | 400 | 400 | 300 | 350 | 350 | -- |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 350 | 400 | -- |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 180 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | -- | 60 | -- |
| வல்லாரை | 60 | 70 | 80 | -- | 100 | -- |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | -- | 250 | -- |


# இராசிபலன்

17.07.2026
ஆடி 01, வெள்ளிக்கிழமை
திருதியை முற்பகல் 10.51 மணிவரை

மகம் முன்னிரவு 11.29 மணிவரை
சுப நேரம் 6.00-7.30 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00மணிவரை
சதுர்த்தி விரதம், ஆடிப்பிறப்பு


சந்திராஷ்டமம்-
உத்தராடம், திருவோணம்

வளவன்




மேஷம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வழிபாடு திருப்தி தரும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




கடகம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.



துலாம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.



ரிஷபம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.



சிம்மம்

நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.



விருச்சிகம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



கும்பம்

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள் இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் புதிய நபர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




கன்னி

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள்.



தனுசு

உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.



மீனம்

உடல் நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.

சிக்கனமும் சேமிப்பும் தான் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1090





மந்திரவாதி உற்று நோக்கிய இடத்தில், குளத்தின் கரையோரமிருந்த அரளிச் செடிப் புதர்களில் வேல் முனை போன்ற ஒன்று சிறிது தெரிந்தது. "ஆ! அங்குசம்!" என்று சொல்லிக் கொண்டே மந்திரவாதி அந்த அரளிச் செடிப் புதரை நோக்கி ஓடினான். முருகய்யன் அவனை விட விரைந்து ஓடி அரளிச் செடிப் புதர்களில் புகுந்து அங்குசத்தின் அடிப்பிடியைப் பிடித்து ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டான்.

பின்னர், திரும்பிப் பார்த்தான் மந்திரவாதியைக் காணவில்லை. "அடடா ஏமாந்து போய்விட்டோமே?" என்ற துணுக்கத்துடன் அங்குமிங்கும் ஓடிப் பார்த்தான், பயனில்லை. குளக்கரையில் கூடியிருந்த பெரும் ஜனக் கூட்டத்தின் மத்தியில் புகுந்து மந்திரவாதி கிரமவித்தன் மாயமாய் மறைந்து விட்டான்.

மதயானை ஓடிப்போன பிறகு, ஜனங்கள் மறுபடியும் திரும்பிச் சோழ மாளிகையை நெருங்கி வந்து கொண்டிருப்பதை முருகய்யன் கண்டான். ஆனால் அங்கே அவன் நிற்கவில்லை.

முதல் நாள் மந்திரவாதியை அவன் பார்த்த வீடு எந்தத் திசையில் இருந்தது என்பதை நினைத்துப் பார்த்துக் கொண்டு, அதை நோக்கிச் சென்றான். வழியெல்லாம் இராஜ வீதிகளிலெல்லாம், ஜனங்கள் ஆங்காங்கு கூடிக் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். மதயானை ஓடியதைப் பார்த்தவர்களில் சிலர், "யானையின் பேரில் யாரோ ஆள் இருந்ததாகத் தோன்றியது" என்றார்கள். மற்றும் சிலர் அதை மறுத்தார்கள். "அது எப்படி இருக்க முடியும்? யானைப்பாகனைத் தூக்கி எறிந்தவுடனே தான் யானை ஓடத் தொடங்கி விட்டதே? அதன் பேரில் யார் ஏறியிருக்க முடியும்" என்றார்கள். எல்லாரும் இவ்வாறு விவாதித்துக் கொண்டே சோழ மாளிகையை நோக்கித் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். தங்கள் இதயங் கவர்ந்த இளவரசருக்கு அபாயம் ஒன்றும் நேரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஜனங்கள் அனைவரும் ஆவலாக இருந்தார்கள்.

முருகய்யன் ஜனங்கள் வந்த திசைக்கு எதிர்த் திசையில் சென்று குறிப்பிட்ட சந்தை அடைந்தான். அங்கே அப்போது ஜன நடமாட்டமே இருக்கவில்லை. எல்லாரும் இராஜ வீதிகளுக்குப் போய் விட்டார்கள். இரவில் பார்த்த வீட்டைப் பகலில் அவ்வளவு சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. உற்றுப் பார்த்துக்கொண்டே முருகய்யன் போனான். ஒரு வீடு மட்டும் வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தது. உள்ளேயிருந்து ஏதோ முனகல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பாழும் வீடு இருந்தது. முருகய்யன் அந்தப் பாழும் வீட்டில் புகுந்து அடுத்த வீட்டின் மேற் கூரையில் ஏறி முற்றத்தில் குதித்தான். அவன் எதிர்பார்த்தபடியே அங்கே யானைப்பாகன் தென்பட்டான். அவன் வெறி கொண்டவனைப் போல் தோன்றினான். அவனுடைய கால்களையும், கைகளையும் கட்டியிருந்ததுமல்லாமல் ஒரு தூணோடும் அவனைச் சேர்த்துக் கட்டியிருந்தார்கள். யானைப்பாகன் தன் கைக் கட்டுக்களைப் பல்லால் கடித்து அவிழ்க்கப் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தான். நடு நடுவில் கடிப் பதை நிறுத்தி விட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டு மிருந்தான்.

முருகய்யனைப் பார்த்ததும் அவன் முகத்தில் சிறிது தெளிவு ஏற்பட்டது. நாகைப் பட்டினத்திலேயே அவன் முருகய்யனைப் பார்த்திருந்தான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கவலைக்கு மருந்து



தங்கபுரி என்று ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரில் வளவனார் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். வளவனார் சிறந்த பண்புநலம் உடையவர் பெருஞ் செல்வர் நல்ல அறிஞரும் கூட. தங்கபுரியில் அவர் செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்து வந்தார்.

வளவனார் உழைப்பினால் உயர்ந்தவர். சிறுவயதில் பாடுபட்டு உழைத்துப் பெருஞ் செல்வராக முன்னுக்கு வந்தவர்.

வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்தவர். அதே போல் உயர்ந்த இன்ப வாழ்வையும் அடைந்தவர்.

வளவனார், சுறுசுறுப்பானவர் நல்ல உழைப்பாளி. அதனால் அவர் நோயென்று படுத்ததே கிடையாது.

அவருக்கு எண்பதாவது வயது நடக்கும் போது ஒரு நாள் காய்ச்சல் என்று படுக்க நேர்ந்தது. மூன்று நாட்களில் அந்தக் காய்ச்சலும் பறந்து விட்டது. மிகுதியாக உழைத்து, அளவோடு உண்டு, நல்வழியில் நடந்து வருபவர்களுக்கு நோய் நொடிகள் வருவதில்லை, வந்தாலும் எளிதாக மறைந்து போய்விடும்.

காய்ச்சலாகப் படுத்திருந்த அந்த மூன்று நாட்களில் அவருக்கு ஒரு பயம் தோன்றியது.

தனக்கு வயதாகிவிட்டது. இனி நெடு நாட்கள் உயிருடன் இருக்க முடியாது. எனவே, அதற்கு முன்தன் ஒரே மகனைப்பொறுப்பும் தகுதியும் உள்ளவனாக ஆக்கிவிட வேண்டும் என்று எண்ணினார்.

காய்ச்சலிலிருந்து விடுபட்டு, உடல் நலம் அடைந்த பிறகு ஒரு நாள் அவர் தன் மகனைக் கூப்பிட்டார்.

'அன்பு மகனே! எனக்கு வயது மிகுந்து விட்டது. இன்னும் சில ஆண்டுகள்தான் நான் உயிரோடு இருப்பேன். அதற்குள் நீ பொறுப்புள்ளவனாய் வளர வேண்டும். என்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் பார்த்துக் காப்பாற்றிவைத்துக் கொள்ள உனக்கு உலக அனுபவம் வேண்டும். அவ்வப்போது நிலைமைக்கு ஏற்ப முடிவு எடுக்கும் திறமையை நீ பெற வேண்டும். ஆகவே மகனே நீ இப்போது உலகப் பயணம் மேற்கொள். உலகில் உள்ள பல நாடுகளுக்கும் சென்று உலக அனுபவம் பெற்றுவா. எங்கு சென்றாலும் நீ தங்கியிருக்கக் கூடிய புகலிடங்களை உண்டாக்கிக் கொள்.

அப்போது தான் உனக்குக் கவலை ஏற்படும்போதோ, வேறு தேவையுண்டாகும் போதோ அவை பயனுள்ளவையாக இருக்கும்" என்று கூறினார்.

மகனும் தந்தையிடமிருந்து நிறையப் பணம் பெற்றுக் கொண்டு உலகச் சுற்றுப் பயணம் புறப்பட்டான். பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும், புகை வண்டிகளிலும், மின் வண்டிகளிலும் கப்பல்களிலும், வானூர்திகளிலும் தன் விருப்பம் போல் அவன் பல நாடுகளுக்கும் சென்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கழிவகற்றல் முகாமைத்துவத்தில் இன்னமும் பின்தங்கிய நிலை

கழிவகற்றல் முகாமைத்துவம் என்பது தவிர்க்க முடியாத விடயப் பொருளாயிற்று.

ஆம், இன்றைய சூழலில் மிகப்பெரும் பிரச்சினையாகவும் சவாலாகவும் இருப்பது கழிவகற்றலும் அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதுமாகும்.

அதாவது ஒரு காலத்தில் பொலித்தீன்கள் மற்றும் மின்னியல் உபகரணங்கள் கழிவுப் பொருட்களுக்குள் உள்ளடங்கவில்லை.

மாறாக வீடுகளில் உள்ள உக்கக்கூடிய பொருட்கள் மற்றும் சருகுகள், பனைஓலைகள் என்பனவற்றையே நாம் குப்பை கூழங்கள் எனக் கூறினோம். அதாவது அந்தக் காலத்தில் கழிவு என்ற சொல், ஒன்றுக்கும் உதவாதது எனப் பொருள்பட்டது.

ஆக, அன்றைய நம் விவசாயிகள் வீடுகளில் சேருகின்ற குப்பை கூழங்களை மற்றும் வீடு வேயப்பட்ட பனை ஓலைகள்ள உக்க வைத்து அவற்றைத் தங்களின் விவசாய நிலத்திற்கான பசளையாக்கினர்.

அதனால் அன்றைய காலத்தில் கழிவுப் பொருள் என்ற பேச்சுக்கு இடமிருக்கவில்லை. தவிர, அன்று கழிவுப் பொருள் என்று சொல்வதற்கே மக்கள் கூச்சப்பட்டனர்.

ஆனால், இன்று சொப்பின்பைகள், உக்காத மின்னியல் சாதனங்களின் பாகங்கள் மலையாகக் குவிகின்றன.

இதற்கும் அப்பால் இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்திச் செய்யப்படுகின்ற வெற்றுப் பொதிகள், பிளாஸ்டிக் போத்தல்கள், றெஜிபோம்கள் என ஏக்கப்பட்ட கழிவுப்பொருட்களுடன் மக்கள் போராட வேண்டியுள்ளது.

இங்குதான் கழிவகற்றல் முகாமைத்துவம் என்பது பேசுபொருளாகிறது. ஆம், இப்போது எங்கள் சுற்றுச் சூழலில் எங்கு பார்த்தாலும் குப்பைகளும் கழிவுப் பொருட்களுமாகக் காட்சி தருகின்றன.

அதிலும் மக்கள் குடியிருக்காத வெளிகள், கடற்கரையோரங்கள், கடல்தாவரங்கள் உள்ள இடங்கள் என எங்கும் கழிவுப் பொருட்களைக் கொட்டி விட்டுச் செல்கின்ற மன நிலையிலேயே மக்கள் உள்ளனர்.

ஆக, மக்களின் மனநிலையில் – மனப்பாங்கில் நேர்க்கணிய மாற்றம் ஏற்படாத வரையில், கழிவகற்றல் முகாமைத்துவம் படுதோல்வி அடைவது சர்வ நிச்சயம்.

ஆம், பொதுமக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளை எங்கு கொட்டினாலும் அவற்றை செம்மையாக அப்புறப்படுத்த வேண்டியது உள்ளூராட்சி அமைப்புகளின் கடமை என்றாகி விட்டது.

இங்குதான் பொதுமக்களின் கடமை பற்றி எவரும் சிந்திக்காமல் உள்ளனர். உண்மை. சரியான கழிவகற்றல் முகாமைத்துவக் கட்டமைப்புக்குள் அனைத்துத் தரப்புகளும் வராத காரணத்தால், கழிவகற்றுகின்ற நடைமுறைகளால் ஒரு பகுதி மக்கள் பாதிப்படைகின்ற துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்படுகிறது.

எனவே ஒட்டு மொத்தமாக அனைவரும் கழிவகற்றல் விடயத்தில் தத்தம் வகிபங்கை மிக உச்சமாக வழங்க வேண்டும்.

அப்போதுதான் கழிவகற்றலானது யார்க்கும் தீங்கில்லாத செயற்பாடாக மாறும்.

# புலம்பெயர் தொழிலாளர்களின் ஓய்வூதிய சிக்கல்கள் தீர்க்கப்படும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டில் பணி புரியும் ஊழியர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சிக்கல்களை விரைவாகத் தீர்த்து அதனை இம்முறை வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் உள்ளடக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு 2026 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு மற்றும் 2027 வரவுசெலவுத் திட்டத்திற்கு முந்தைய கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இக்கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போது நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித் தரும் பிரதான துறைகளில் ஒன்றாக விளங்கும் வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்காக, மிகவும் முறையான ஓய்வூதியத் திட்டமொன்றின் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றுலாத் துறை சார்ந்த முன்மொழிவுகளை மாவட்ட மட்டத்தில் மிகவும் செயற்திறனுடன் முன்னெடுப்பதற்காக, அந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை மாவட்ட செயலாளர்களுக்கான நிதி இருப்புக்கு நேரடியாக வழங்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இதன்மூலம், மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் சுற்றுலாக் குழுக்களின் சிறந்த ஒருங்கிணைப்புடன் சம்பந்தப்பட்ட சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிகிரியா, கலேவெல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்த முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை, சுற்றுலா அமைச்சு மற்றும் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

ஒவ்வொரு நிறுவனமும் தனித்தனியாகச் செயற்படுவதற்குப் பதிலாக, ஒரு பொதுவான திட்டத்தின் கீழ் செயற்படுவதன் மூலம் நேரத்தையும் உழைப்பையும் மிச்சப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-7)

# இலங்கையில் தடையின்றி எரிபொருளை விநியோகிக்க முயற்சி

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

இலங்கையில் தடையின்றி எரிபொருளை விநியோகிக்க முயற்சிக்கப்படும் எனச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் ஏற்படக்கூடிய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சவால்களை எதிர்கொள்வதில், கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்கம் மிகவும் அவதானமாகச் செயற்பட்டு வருகிறது.

தற்போது டீசல் நுகர்வு 11 வீதத்தாலும், பெற்றோல் நுகர்வு 9 வீதத்தாலும் குறைந்துள்ள போதிலும் மத்திய கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருள் ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டியுள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் மசகு எண்ணெய் விலையின் ஏற்ற இறக்கங்களுக்கு அமைவாகவே உள்நாட்டு எரிபொருள் விலைகள் தீர்மானிக்கப்படும்.

சர்வதேச ரீதியில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கைகள் குறித்துப் பேசப்பட்டாலும் எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன.

இதனால், நாட்டில் எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து எரிபொருளை விநியோகிப்பதை உறுதிப்படுத்த நாம் முயற்சிப்பதால், உலக சந்தையில் நிலவும் மிகக் குறைந்த விலைக்கு எம்மால் எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியாமல் போகலாம் எனத் தெரிவித்தார். (ம-7)

# யானைத் தந்தங்களுடன் நிலாவெளியில் ஒருவர் கைது

திருகோணமலை - நிலாவெளிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் யானைத் தந்தங்களை வீட்டில் வைத்திருந்த நபரொருவர் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று முன்தினம் நிலாவெளி, வள்ளுவர்வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த யானைத் தந்தங்கள் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன. (ம-7)

# ரூ.2 கோடி பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன்

## ஆசிரியையும் அவரது கணவரும் கைது

மாதம்பிட்டியப் பகுதியில் கொழும்பிலுள்ள சர்வதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியை மற்றும் அவரது கணவர் ஆகியோர் 2 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 6 கிராம் ஐஸ் போதைப் பொருளும் பெண்ணிடமிருந்து 149 கிராம் 150 மில்லிகிராம் ஐஸ்போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் 'மோதர மயூரா' எனும் போதைப் பொருள் கடத்தல்காரனின் ஆதரவாளர்கள்எனவும் நீண்டகாலமாக இக் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும்பொலிஸார் முன்னெடுத்திருந்த ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிக வெப்பத்தால் காட்டுத்தீ அபாயம் அதிகரிப்பு

## 5 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக பதுளை, மொனராகலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தொடர்ச்சியாக காட்டுத் தீ பரவும் சம்பவங்கள் பதிவாகி வருவதாக வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**


வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திம பாலமகும்புர வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்த மூன்று மாவட்டங்களுக்கு மேலாக அநுராதபுரம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலும் அதிக வெப்பநிலை காரணமாக காட்டுத் தீ பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நக்கிள்ஸ் வனப்பகுதியின் ஹுன்னஸ்கிரிய பகுதியில் கடந்த இரண்டு நாட்களாகப் பரவியிருந்த காட்டுத்தீ தற்போது முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உலக நாடுகளைப் பாதித்து வரும் "எல் நினோ" காலநிலை மாற்றத்தின் தாக்கம் இலங்கையின் வானிலையிலும் தற்போது உணரப்படத் தொடங்கியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய காலநிலை முன்னறிவிப்புகளின்படி, தற்போது பலவீனமான நிலையில் காணப்படும் "எல் நினோ" தாக்கம் எதிர்வரும் ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான காலப் பகுதியில் 80 சதவீதத்திற்கும் அதிகமாக தீவிரமடையும் வாய்ப்பு இருப்பதாகவும், இதனால் வெப்பநிலை மற்றும் வறட்சி நிலை மேலும் மோசமடையக்கூடும் என்பதால் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (நி)

# இன்று ஆடிப்பிறப்பு



ஆனந்த கோலாகல ஆடிப்பிறப்பு நன்னாள் இன்றாகும். ஆடி மாதம் பிறந்து விட்டால் விரதங்களுக்கும் விழாக்களுக்கும் குறைவில்லை. ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், ஆடி அமாவாசை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். இன்று பிறந்துள்ள ஆடிமாதம் சைவ மக்களின் மிக முக்கியமான கொண்டாட்டங்களின் நிறை மாதமாகும்.

இந்த ஆடிப்பிறப்பு நன்னாளில் ஆடிக்கூழ் காய்ச்சிக் குடிப்பது வழக்கமாகும். அதுமட்டுமன்றி இன்று இனிப்பான தின்பண்டங்கள், கொழுக்கட்டை, மோதகம், சீனி அதிரசம் என்று அடுக்கடுக்காக நல்ல உணவுப் பதார்த்தங்களைச் செய்து உற்றார் உறவினர்களுடன் கூடி இருந்து உண்டு மகிழ்வர்.

ஆடிப்பிறப்பு நன்னாளில் காலை எழுந்து புனித புண்ணிய நீராடி ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்து நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து, தனக்கும் மற்றவர்களுக்கும் எம்மாலான உபகாரங்களைச் செய்து வாழ்வை துவங்குதலே சாலச்சிறந்தது.

பொதுவாக ஆடி மாதத்திலே நல்ல காரியங்களைச் செய்யமாட்டார்கள். இது ஒரு பீடை பிடித்த மாதம் என்று ஒதுக்கி தள்ளி வைப்பார்கள். அது அவர்களின் அறியாமையே. ஆடியிலே தாம்பத்தியம் மாத்திரமே ஆகாதது என்பது தமிழ் மக்களின் நம்பிக்கையாகும்.


இன்று பிறந்துள்ள ஆடிப் பிறப்பானது தமிழ் மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமென்று எதிர் பார்த்திருத்தலில் அர்த்தமுண்டு. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் என்ற முறையில் எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவனிடம் நமது வாழ்க்கையை ஒப்படைத்து எல்லாம் அவன் செயல் என்று முற்றாக நம்பி அவனன்றி ஒரணுவும் அசையாது என்பதை மனதில் கொண்டு வாழத் தலைப் படுவோமாக.

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**


## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3381

facebook


### சயானா





### கிருஷ்ணன்




### சாருஜன்




### எழில்




### கார்த்திக்




### நிலக்ஷி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனா...

கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் மிகவும் அமைதியான முறையிலேயே நடைபெற்று வந்தது.

இந்நிலையில், சிவபூசையில் கரடி புகுந்தது போல, ஒரு கரடி புகுந்து பைத்தியக்காரத்தனமாக விளையாடி, குழப்பத்தை விளைவித்துக் கூட்டத்தை இடைநிறுத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்ச்சியாக எல்லாக் கூட்டங்களுக்கும் சென்று குழப்பம் விளைவித்து வருகின்றார். அதிகாரிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி வருகின்றார்.

அபிவிருத்திக் குழுக்கூட்டத்தைப் பயன்படுத்தி அதிகாரிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தக் கூடாது. அவ்வாறு செய்தால், அந்த அதிகாரிகளால் சமூகத்தின் முன் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

அர்ச்சுனாவின் இத்தகைய செயல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு இன்றைய (நேற்று) கூட்டமே சாட்சியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இருப்புத் தொடர்பில் நாம் அவதானம் செலுத்துவோம். அடுத்து வரும் நாட்களில் மீண்டும் அபிவிருத்திக் குழு கூடும். அப்போது உறுதியான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7)

## பலத்த காற்று...

உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதற்கமைய வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என அத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான மற்றும் கற்பிட்டியிலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற் பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, குறித்த கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும் என்பதால், இது குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு கடற்றொழில் மற்றும் கடற்சார் சமூகத்திற்கும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## பாடசாலை...

இயங்கும் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்கள் மற்றும் பிக்குகளுக்கான 2027ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணிகள் சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.

இதற்கான உத்தியோகபூர்வ சான்றிதழ்கள் பரிமாற்றம் நேற்று முன்தினம் பத்தரமுல்லை, இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சு வளாகத்தில் நடைபெற்றது.

இதற்காக 10.820 மில்லியன் மீற்றர் அளவிலான பாரிய சீருடை துணியை சீன அரசாங்கம் இலங்கைக்கு முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது.

இந்த விசேட உதவித் திட்டத்தின் கீழ், 2027ஆம் ஆண்டிற்காக இலங்கையில் உள்ள சுமார் 4.18 மில்லியன் பாடசாலை மாணவர்களின் முழுமையான சீருடைத் தேவை பூர்த்தி செய்யப்படவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், இதன்போது இணக்கப்பாட்டுச் சான்றிதழ்கள் பரிமாற்றமானது இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஷென்ஹொங் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் [illegible] ஆகியோருக்கிடையில் இடம்பெற்றது. (ம-7)

## மூதூர்...

மூதூர் - மணற்சேனை படுகொலையின் 40வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (16) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மூதூர் - மணற்சேனை இந்து மயான முன்றலில் இடம்பெற்ற இவ் நினைவேந்தலை குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி ஒரு நிமிட மௌன பிரார்த்தனை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு தீபம் ஏற்றி, மலர்தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

1986.07.16 அன்று கிராமத்திற்குள் புகுந்து மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் சம்பவத்தில் 44 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டுக்கு...

எந்தவொரு தடையும் இல்லை என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் ஒழிந்திருக்கும் பாதாள உலகக்குழுவினரைத் இராஜதந்திர தூதரக உறவுகள் மூலம் இலங்கைக்குக் அழைத்துவர முடியுமென்றால், இவர்களைக் கொண்டு வருவதும் சாத்தியமானதே என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

குறித்த நபர்களை நாட்டுக்கு அழைத்து வரும் விவகாரம் முற்றிலும் நீதித் துறை சார்ந்த ஒரு செயன்முறையாகும். அரசாங்கம் என்ற ரீதியில் எமது பொறுப்பு, சட்டமா அதிபர் திணைக்களத் திற்கும் பொலிஸாருக்கும் தேவையான அனைத்து வசதிகளையும், சுயாதீனத்தையும் தடையின்றிச் செய்துகொடுப்பதே ஆகும். அதனடிப்படையில், எமது விசாரணை அதிகாரிகள் முதற்கட்ட விசாரணைகளை முறையாக முன்னெடுத்து, நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்வார்கள். அதன் பின்னரே அவர்கள் மீதான பிணை அல்லது சிறைத்தண்டனை போன்ற இறுதித் தீர்மானங்களை நீதிமன்றம் சுயாதீனமாக மேற்கொள்ளும்.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடம் இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள உத்தியோகபூர்வ கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில்கள் கிடைத்துள்ளனவா என்பது குறித்த துல்லியமான விபரங்கள் தற்போதைக்கு என்னிடம் இல்லை. எவ்வாறாயினும், இலங்கையின் நீதித்துறை நடவடிக்கைகளுக்காக சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேசப் பொலிஸாரின் முழுமையான ஆதரவு அரசாங்கத்திற்குத் தூதரக ரீதியாகத் தொடர்ந்து கிடைத்து வருகின்றது.

இதன்படி, பொதுமக்கள் தற்போதைக்கு நினைத்துக் கூடப் பார்க்காத பல முக்கிய குற்றவாளிகள் மற்றும் சந்தேகநபர்கள் மிக விரைவில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு நீதிமன்றக் கூண்டில் நிறுத்தப்படுவார்கள். இந்தச் சட்ட நடவடிக்கைகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி மிகவும் விரைவாகவும் துல்லியமாகவும் நடக்கும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.07.16 — சீட்டிழுப்பு இலக்கம் 6250 — G 0 6 3 3 5 1
அத சம்பத — G 3 3 5 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0825

சுப தவசக — 2026.07.16 — 0366 — விருச்சிகம் 02 16 40 — 8323

தன நிதானய — திகதி 2026.07.16 — சீட்டிழுப்பு இலக்கம் 2280 — T 11 20 24 78 T

மெகா பவர் — திகதி 16/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2598 — L 05 08 09 51 64

ஜய — 2026.07.16 — 0518 — V 6 3 0 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4492 — சீட்டிழுப்பு திகதி 16.07.2026 — J 33 52 70 75

ஹதஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.16 — சீட்டிழுப்பு இலக்கம் 1559 — கடகம் 31 34 37 38 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வசனா — 16.07.2026 — 0958 — U 8 5 2 3 1 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,192,451.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3224 — 25000 பணப் பரிசு 52191 — சீட்டிழுப்பு திகதி 2026.07.16 — தினம் வியாழக்கிழமை — 26 60 68 70 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,137,248.80

சனிதா — திகதி 16.07.2026 — வெற்றி வாரம் 5385 — 22 30 47 78 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,546,638.40 — 14882

சசிரி — வெற்றி வாரம் 1054 — 16.07.2026 — வியாழக்கிழமை — 06 32 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,538,560.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4936 — சீட்டிழுப்பு திகதி 16.07.2026 — தினம் வியாழக்கிழமை — 14 54 59 62 ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,045,079.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — X 07 06 30 55 63 — 2400 — 16.07.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.317,386,003.00

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 3050 — சீட்டிழுப்பு திகதி 2026.07.16 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,444,053.60 — 36 39 47 61 T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழ் பேசும் கட்சி...

கால்நடை மற்றும் நீர்பாசனத்துறை அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (16) நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளோம். மானிய விலைக்கே உரம் தற்போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் ஏதாவதொரு விடயத்தை எதிர்க்கட்சித் தலைவர் கையில் எடுக்கிறார். ஒருசில பிரச்சினைகளின் பின்னணியில் அரசியல் காரணிகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

விவசாயிகளின் உரிமை பற்றி தற்போது பேசும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எவ்வாறு செயற்பட்டார். விவசாயிகளுக்கு எவ்வாறு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளோம். நெல் கொள்வனவுக்கு நியாயமான வகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயத்தை அரசியலாக்கும் முயற்சியை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவருடன் ஒன்றிணைவது இனி எவ்வித பயனுமில்லை என்பதை முன்கூட்டியதாக உணர்ந்தே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைந்துள்ளன. இது சிறந்ததே. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு வரவேற்கத்தக்கது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு இனி அரசியல் இல்லை, அவருடன் ஒன்றிணைந்திருந்தால் தம்மை தெரிவு செய்த மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாது என்பதை தமிழ் மற்றும் முஸ்லிம் பிரமுகர்கள் விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்றார். (ம-7)


## மணப்பெண் தேவை

1. மண்டைதீவு - சுருவில், 1986, இந்து, மூலம், A/L, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34769)
2. அளவெட்டி - கொக்குவில், இந்து, 1998, விசாகம், A/L, It work, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56530)
3. ஏழலை, இந்து, 1986, திருவோணம், A/L Supermarket, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54758)
4. வேலணை - இந்து, 1987, ஆயிலியம், IT Engineer, Divorce, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53916)
5. வடமராட்சி, இந்து, 1988, மிருகசீரிடம், Business management, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (50001)
6. நீர்வேலி, இந்து, 1981, புனர்பூசம், O/L, Divorce, Supermarket owner, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (39079)
7. காரைநகர், இந்து, 1979, உத்தரம், Engineering, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (44887)
8. மண்டைதீவு, இந்து, 1979, மூலம், A/L, Own Business, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (46580)
9. வல்வெட்டி, இந்து, 1992, விசாகம், A/L Own Business, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (55677)
10. பருத்தித்துறை, இந்து, 1979, ACCA, Own Business, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58731)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.

(C-6056)

S.Sharma J.P
www.thaalee.com
077 803 8193
077 539 3728


## பலாலி இராஜ...

பாதையினூடாக செல்ல இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

எற்கனவே கடந்த ஆண்டு ஆலயப் பகுதி விடுவிக்கப்பட்ட போதும் மக்களின் காணியூடாக அமைக்கப்பட்ட தற்காலிக பாதையூடாகவே செல்லும் நிலை ஏற்பட்டதுடன் நிரந்தர பாதை மூடப்பட்டே இருந்தது.

எனினும் அப்பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணியை சுற்றி வேலியை அமைத்ததால் மக்கள் ஆலயத்துக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்தினர் இராணுவத்தினரிடமும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடமும் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து அண்மையில் இராணுவத்தினருடன் கலந்துரையாடியதையடுத்து நிரந்தரப் பாதை திறக்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வருபவர்கள் அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்ட பின் வீதியால் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7,33)


# யாழ்ப்பாணத்தில் கோள்மண்டலம்



அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளுடன் நீங்களும் கோள்மண்டலத்தைப் பார்வையிட்டு மனதிற்கு உற்சாகமான வித்தியாசமான அனுபவத்தை அனுபவியுங்கள்...

ஆசியாவின் மாபெரும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட நடமாடும் கோள்மண்டலம்

மாணவர்களின் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்று வெற்றி நடைபோடுகிறது.
இன்றே கோள்மண்டலத்திற்கு விரைந்து வித்தியாசமான அனுபவத்தைப் பெற்றிடுங்கள்.

இடம் : யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, கொக்குவில்.
காலம்: ஆகஸ்ட் 09 வரை
பொது மக்களுக்கு
நேரம் : பி.ப 5.00 - 6.30
பி.ப 7.00 - 8.30

விண்வெளிக்குச் செல்லும் அனுபவத்தை கோள்மண்டலம் உங்களுக்குத் தரும்...

நுழைவுச் சீட்டு 350/= மட்டுமே

(2527)

தொடர்புகளுக்கு
077 782 6217, 076 108 9005

## விற்பனையாளர் தேவை (பெண்)

63, பெரியகடை வீதியில் உள்ள எமது பிடவைக் கடைக்கு O/L படித்த தொழில் பழக ஆர்வம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை.
(மதிய உணவுடன் கூடிய சம்பளம்)

சென்னை பெசன் ஹவுஸ்
63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 5464

(C-6058)

## தேவை

பொதி செய்யப்பட்ட சிற்றுண்டி வகைகள் விநியோகம் செய்வதற்கு சிறிய ரக DEMO BATTA வாகனம் மாத வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு :
KJK Distributors
076 621 5222
077 213 8276

(C-6057)

## காணி விற்பனைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இராசாவின் தோட்டத்தில் 1 ½ (ஒன்றரை) பரப்பு காணி விற்பைனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
072 151 5090

(8053)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant க்கு Waiter, House Keeper, CookerS, Manager தேவை.

தொடர்புகளுக்கு :
076 830 3931

(8065)

## விற்பனையாளர் தேவை (ஆண்)

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது பிடவைக் கடைக்கு O/L படித்த தொழில் பழக ஆர்வம் உள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை.

சிவகணேசன் TEX
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2063

(C-6060)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வேலைவாய்ப்பு

எமது காட்சியறைக்கு பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான ஆண்/ பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

- விற்பனைப் பிரதிநிதி
- விற்பனையாளர்
- காசாளர்
- Accounting staff

தகைமை – O/L கனித பாடம் சித்தியடைந்திருத்தல். பொருத்தமானவர்கள் 18.07.2026(சனிக்கிழமை) நேரில் வருகை தரவும்.

021 221 3903

(2525)

Mega Ceramic Mall
No.469,K.K.S Road, Jaffna.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media